සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Provincial Department of Education - NWP**

| தரம் 08 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 62 T |
|---|---|---|

சுட்டெண் .........................................

**குடியியற் கல்வி** **நேரம் 2 மணித்தியாலம்**

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**
- **01 முதல் 05 வரையான வினாக்களுக்குரிய விடையினை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டினுள் எழுதுக.**

01. மக்களின் நாளாந்த வாழ்க்கை நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக ...................................................... பயன்படுத்தப்படும்.
(பொதுத்தேவை/ பொது நடவடிக்கை/ பொதுச்சேவை)

02. சமூகத்தில் காணப்படும் மிகச்சிறியதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான அடிப்படை அலகு ...................... ஆகும்.
(பாடசாலை/ குடும்பம்/ பௌத்த சமயம்)

03. சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிறுவனம் ................................................ ஆகம்.
(பாதுகாப்பு நிறுவனம்/ தேசிய சுற்றாடல் சங்கம்/ மத்திய சுற்றாடல் அதிகார சபை)

04. பிள்ளைகளின் சுதந்திரத்தையும் ............................................... அனுபவித்தவாறு ஜனநாயக ரீதியான பிரஜையாக விளங்க வேண்டும்.
(சமத்துவத்தையும்/ சகோதரத்துவத்தையும்/ ஒற்றுமையையும்)

05. இன்று உலகில் பெரும்பாலான நாடுகளில் செயற்படுத்தப்படுவது ........................................... முறையாகும்.
(மன்னராட்சி/ ஜனநாயக ஆட்சி/ ஒரு கட்சி முறை)

- **06 முதல் 10 வரையுள்ள கூற்றுக்கள் சரியெனின் (✓) எனவும், பிழையெனின் (✗) எனவும் குறிக்க.**

06. பாதகமான மனவெழுச்சி நிலைமைகள் தொடர்ந்தும் காணப்படுவதன் மூலம் தனிநபர்கள் உடல், உள, சமூக ரீதியாகப் பாதிப்புக்குள்ளாகின்றனர். ( )

07. பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல் தகவல் தொடர்பாடல் துறையின் பொறுப்புக்களும் கடமைகளுமாகும். ( )

08. தேசியத் தேவைகளுக்கு ஏற்ற வகையில் பிரஜைகளை உருவாக்குதல் பாடசாலையினுள் மேற்கொள்ளப்படும் கடமைகளில் ஒன்றாகும். ( )

09. சமூகத்தின் பாதுகாப்பு, குறிக்கோள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை நிறைவேற்றி வைப்பதுடன் அவற்றை வழிநடத்திச் செல்லக் கூடிய சிறந்த தலைமைத்துவம் அவசியம். ( )

10. குழுவாகச் செயற்படும் போது பொறுமை, மக்கள் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், சமத்துவம் பேணல் போன்ற தனிமனித பண்புகள் விருத்தியடைவதனால் சமூகத்தில் பிரச்சினை தோன்ற வழிவகுக்கும். ( )

- **11 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

11. அநுராதபுர யுகத்தில் 10 கிராமங்களுக்கு ஒரு வைத்தியர் வீதம் நியமிக்கப்பட்டிருந்தமை பற்றிக் குறிப்பிடுவது,
    1. பண்டுகாபய மன்னனின் ஆட்சிக் காலத்தில் சுகாதார சேவை விருத்தியடைந்தமையாகும்.
    2. புத்ததாச மன்னனின் ஆட்சிக் காலத்தில் சுகாதார சேவை விருத்தியடைந்தமையாகும்.
    3. IV மகிந்த மன்னனின் ஆட்சிக் காலத்தில் சுகாதார சேவை விருத்தியடைந்தமையாகும்.
    4. தாதுசேன மன்னனின் ஆட்சிக் காலத்தில் சுகாதார சேவை விருத்தியடைந்தமையாகும்.



kalvi.lk

12. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பொதுச் சேவைகளில் ஒன்று,
   1. சுகாதாரச் சேவை
   2. வங்கிச் சேவை
   3. குழாய் நீர் வசதிச் சேவை
   4. பாதுகாப்புச் சேவை

13. சர்வாதிகார தலைமைத்துவப் பாங்குகளில் ஒன்று,
   1. தனித்துவத் தீர்மானம் எடுத்தல்.
   2. பிழையான முன்னுதாரணங்களை விளக்குதல்.
   3. மக்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளல்.
   4. மக்கள் நலன்புரி நடவடிக்கையில் ஈடுபடல்.

14. குடும்பத்தினுள் காணக்கூடிய ஜனநாயகப் பண்புகளில் ஒன்று,
   1. தனித்தனியாகத் தீர்மானம் எடுத்தல்.
   2. தனியாகச் செயற்படல்.
   3. சமத்துவத்துடன் செயற்படல்.
   4. உரிமைகளை மாத்திரம் அனுபவித்தல்.

15. தலைவரிடம் காணப்பட வேண்டிய மனவெழுச்சித் திறன்களில் ஒன்று,
   1. சமூகமயத் தன்மை
   2. உணர்வு பூர்வமாகச் செயற்படல்.
   3. ஒழுங்குபடுத்தல்.
   4. நிலையான தன்மை

- **16 முதல் 20 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள படத்தைக் கொண்டு விடையளிக்க. A, B, C உருக்களைப் பயன்படுத்துக.**

**A**

Education
கல்வி
අධ්‍යාපන

16. உரு A யில் காணப்படும் இலச்சினை யாது? ............................................................

17. இச்சர்வதேச அமைப்பின் நோக்கம் யாது? ....................................................................

பின்வரும் B, C எனும் உருக்களில் காணப்படும் இரண்டு வகையான குடும்பங்களைப் பெயரிடுக.

18.  ........................................................

**B**

19.  ........................................................

**C**

20. மேலே காட்டப்பட்டுள்ள B, C குடும்ப அலகுகளுள் மிகவும் சிறந்த பாதுகாப்பை பிள்ளைகளுக்கு வழங்கக்கூடிய குடும்ப அலகு யாது?

........................................................................ (2x20=40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடையளிக்க.**
- **முதலாவது வினாவிற்கு 16 புள்ளிகளும் ஏனைய 4 வினாக்களுக்கும் 11 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.**

01. i. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்க.

A  B  C 

மேலே தரப்பட்டுள்ள A, B, C ஆகிய உருக்களில் காட்டப்பட்டுள்ள பொதுச்சேவைகளைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii.

C  E 

a) மேலே தரப்பட்டுள்ள உருக்களில் காணக்கூடிய நிகழ்வுகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

b) இந்நிகழ்வுகளால் நாம் அடையும் பயன் யாது? (2 புள்ளிகள்)

iii. பின்வரும் தலைவர்களினது வகிபாகங்களையும், பின்பற்றுவோரின் வகிபாகங்களையும் இடைவெளியில் எழுதிப் பூரணப்படுத்துக.

| தலைவர் | பின்பற்றுவோர் |
| --- | --- |
| அதிபர் | A ...................................... |
| B ...................................... | வகுப்பு மாணவர் |
| மாணவத் தலைவன் | C ...................................... |
| D ...................................... | வகுப்பு மாணவர் |
| E ...................................... | பாடத்தினைக் கற்கும் மாணவர் |

(5 புள்ளிகள்)

iv. தொற்றா நோய்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

v. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மூலம் உமது பிரதேசத்திற்கு வழங்கப்படும் சேவைகள் 3 தருக. (3 புள்ளிகள்)

02. i. பொதுச் சேவைகளின் முக்கியத்துவங்கள் 3 குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. உமது பாடசாலையில் பல்வேறு செயற்பாடுகளில் பங்குபற்றுவதனால் உங்களுக்கு கிடைக்கத் தக்க பயன்கள் பற்றிய பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| உறுப்புரிமை வழங்கும் அமைப்புக்கள் | உங்களுக்குக் கிடைக்கும் பயன்கள் |
| --- | --- |
| இலக்கியமன்றம் | 1. ..............................................<br>2. .............................................. |
| மாணவர் தலைவர் குழு | 1. ..............................................<br>2. .............................................. |
| விவாதக் குழு | 1. ..............................................<br>2. .............................................. |
| சமய மன்றம் | 1. ..............................................<br>2. .............................................. |

(8 புள்ளிகள்)



kalvi.lk

03. i. பயணிகள் போக்குவரத்துக்காக சேவைகளை வழங்கும் அரச நிறுவனங்கள் 2 தருக. (2 புள்ளிகள்)

ii. பொதுப்போக்குவரத்து சேவைகளை முன்னேற்றுவதற்கு அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் 3 னைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. பின்வரும் சேவைத்துறைகளோடு சம்பந்தப்பட்ட பணிகளையும் மிகப் பொருத்தமான முறையில் இணைக்க.





1. கடிதங்களையும் பொறிகளையும் வழங்குதல்.
2. வீதிகளுக்கு ஒளி வழங்குதல்.
3. முத்திரை விற்பனை.
4. ஓய்வூதியம் பெற்றுக் கொடுத்தல்.
5. விற்பனை நிலையங்களின் தேவைகருதி வெளிச்சத்தை பெற்றுக் கொடுத்தல்.
6. வீடுகளுக்கு ஒளியூட்டுதல்.

(6 புள்ளிகள்)

04. i. மக்களின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு பாரிய பங்களிப்பை வழங்கும் கூட்டுறவுச் சேவையின் மகுட வாசகம் யாது? (3 புள்ளிகள்)

ii. உமது பிரதேசத்தில் காணப்படும் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சேவைகள் 3 னைத் தருக. (3 புள்ளிகள்)

iii. பொதுச் சேவைகளை வழங்கும் போது பொதுமக்களாலும் சேவை வழங்குபவராலும் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| பொதுச் சேவைகள் | சேவையைப் பயன்படுத்தும் பிரஜைகளின் கடமைகள் | சேவை வழங்குநர்களின் கடமைகள் |
|---|---|---|
| சுகாதாரம் | 1. ............................................<br>2. ............................................<br>3. ............................................ | 1. ......................................<br>2. ......................................<br>3. ...................................... |

(5 புள்ளிகள்)

05. i. சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு செயற்படும் நிறுவனங்கள் 2 தருக. (2 புள்ளிகள்)

ii. பிரதேச மட்டத்தில் சிறுவர்களுக்கான நலச்சேவைகளை வழங்குகின்ற அரச அதிகாரிகள் மூவரைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. மேலே வினா இலக்கம் ii ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளின் சேவைகள் பற்றிய பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| அதிகாரிகள் | அதிகாரிகளினால் வழங்கப்படும் சேவைகள் |
|---|---|
| | 1. ............................................................................<br>2. ............................................................................ |
| | 1. ............................................................................<br>2. ............................................................................ |
| | 1. ............................................................................<br>2. ............................................................................ |

(6 புள்ளிகள்)



kalvi.lk


06. i. ஜனநாயக ரீதியாக தலைவர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் 3 தருக. (3 புள்ளிகள்)

ii. நீர் உரிமைகளை அனுபவிப்பதைப் போன்று, கடமைகளையும் நிறைவேற்றுவது சம்பந்தமாக பின்வரும் அட்டவணையை மிகப் பொருத்தமானவாறு இணைக்க.

| | |
|---|---|
| கல்வி பெறல் | A. பிறரின் சமய நம்பிக்கைகளுக்கு மதிப்பளித்தல். |
| உரிய பாதுகாப்பு கிடைக்கப் பெறல் | B. பெற்றோருக்கும் மூத்தோருக்கும் மதிப்பளித்தல். |
| சமய நம்பிக்கைகளை மேற்கொள்ளல் | C. ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல். |
| | D. பாடசாலையில் ஒழுக்க விதிகளைப் பாதுகாத்தல். |
| | E. சமயப்பற்றுடன் கூடிய சிறந்த வாழ்வை மேற்கொள்ளல். |
| | F. பெற்றோருக்கு உதவுதல். |
| | G. கல்வி நடவடிக்கைகளில் சிறப்பாக இயங்குதல். |
| | H. பெற்றோரின் உடமைகளைப் பாதுகாத்தல். |

(8 புள்ளிகள்)

07. i. பின்வரும் சட்டகத்தைப் பூர்த்தி செய்க.




இடமிருந்து வலம் :-
1. கல்வியைப் பெற்றுக் கொள்ளும் பொதுவான இடம்.
2. பொதுச்சேவைகளில் ஒன்று.
3. ஒரு பிரதேசத்தின் சட்டத்தையும் சமாதானத்தையும் வழங்கும் பாதுகாப்புப் பிரிவினர்.
4. இதனைப் பாதுகாப்பதினூடாக தொற்று நோய் வருவதிலிருந்து பாதுகாப்புப் பெறலாம்.

மேலிருந்து கீழ் :-
5. இம்மனவெழுச்சிப் பண்பினால் அழுகை வரும்.
6. சிறுவர் உரிமை தொடர்பாக வகுக்கப்பட்டுள்ள பிரதான தலைப்புக்களில் ஒன்று.
7. இதனை இரசிப்பதினூடாக மனதை ஒரு நிலைப்படுத்தலாம்.

(7 புள்ளிகள்)

ii. மனவெழுச்சிப் பண்புகளினூடாக ஏற்படும் விளைவுகள் சம்பந்தமான பின்வரும் தகவல்களை பூரணப்படுத்துக.

மகிழ்ச்சி → 1. ............................................
→ 2. ............................................

பயம் → 1. ............................................
→ 2. ............................................

கோபம் → 1. ............................................
→ 2. ............................................

துக்கம் → 1. ............................................
→ 2. ............................................

(4 புள்ளிகள்)



kalvi.lk

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2019**
**தரம் 08 - குடியியற் கல்வி (62)**
**விடைப்பத்திரம்**

## பகுதி I

| வினா இல. | | விடை | வினா இல. | | விடை |
|---|---|---|---|---|---|
| 01. | | பொதுச்சேவை | 02. | | குடும்பம் |
| 03. | | மத்திய சுற்றாடல் அதிகாரசபை | 04. | | சமத்துவம் |
| 05. | | ஜனநாயக | 06. | | சரி |
| 07. | | பிழை | 08. | | சரி |
| 09. | | சரி | 10. | | பிழை |
| 11. | | 2 | 12. | | 2 |
| 13. | | 1 | 14. | | 3 |
| 15. | | 2 | 16. | | யுனிசெப் |
| 17. | | சிறுவர் உரிமைகளை பாதுகாத்து அதனை நடைமுறைப்படுத்தல். | 18. | | தனிக்குடும்பம் |
| 19. | | கூட்டுக் குடும்பம் | 20. | | கூட்டுக் குடும்பம் |

## பகுதி II

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | i. | | | A. தொடர்பாடல் | |
| | | | | B. சுகாதாரம் | |
| | | | | C. பாதுகாப்புச் சபை | |
| | ii. | a) | | D. தியானத்தில் ஈடுபடல் | |
| | | | | E. பௌத்தாலயத்தில் சமய நடவடிக்கைகளில் ஈடுபடல். | |
| | | b) | | உடல்/ உள திருப்தி | |
| | iii. | | | A. ஆசிரியர் குழாம், மாணவ மாணவியர் | |
| | | | | B. வகுப்பாசிரியர் | |
| | | | | C. பாடசாலை மாணவர்கள் | |
| | | | | D. வகுப்புத் தலைவர் | |
| | | | | E. பாடத்தலைவர் | |
| | iv. | | | இதயநோய், புற்றுநோய் | |
| | v. | | | தொற்றுநோய், தொற்றாநோய், ஒழிப்பு, நோய்த்தடுப்பூசி | 16 |
| 02. | i. | | ♦ | எவ்வித பாரபட்சமின்றி சகல பிரஜைகளுக்கும் பொதுவாகப் பயன்படும். | |
| | | | ♦ | இலாப நோக்கத்துக்கு அப்பால் மக்கள் நலன் கருதல். | |
| | | | ♦ | அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல். | |
| | ii. | | | 1. ஆக்கப்படைப்பு | |
| | | | | 2. சுய ஆற்றலை வளர்த்துக் கொள்ளல். | |
| | | | | 1. தலைமைத்துவத்தை வளர்த்தல். | |
| | | | | 2. குழு ஒருமைப்பாடு வளர்த்தல். | |
| | | | | 1. உடல், உள விருத்தி | |
| | | | | 2. குழு ஒருமைப்பாடு வளர்த்தல். வெற்றி தோல்விகளை சமமாக மதித்தல். | |
| | | | | 1. தர்மங்கள் வளர்ச்சி, பொறுமை | |
| | | | | 2. ஆன்மீக வளர்ச்சி | 11 |
| 03. | i. | | ♦ | இலங்கைப் போக்குவரத்து சபை | |
| | | | ♦ | இலங்கைப் புகையிரத சபை | |
| | ii. | | ♦ | பாதையமைப்பும் புதுப்பித்தலும் | |
| | | | ♦ | அதிவேகப் பாதையமைத்தல். | |
| | iii. | | | 1. 2/ 5/ 6 | |
| | | | | 2. 1/ 3/ 4 | 11 |



kalvi.lk

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04. | i. | | | ஒருவர் எல்லோருக்கும் எல்லோரும் ஒருவருக்கு | |
| | ii. | | ♦ | தரமான சேலைகளை வழங்குதல். | |
| | | | ♦ | பாடசாலைக்கு நுகர்வுப் பொருட்களை வழங்குதல். | |
| | | | ♦ | வங்கிச் சேவை | |
| | | | ♦ | மரண உதவிக்கடன்கள் | |
| | iii. | | ♦ | வைத்திய ஆலோசனைகளைக் கடைப்பிடித்தல். | |
| | | | ♦ | சேவை வழங்கும் நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல். | |
| | | | ♦ | நோயாளிகளுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை வழங்குதல். | |
| | | | ♦ | சிறந்த புதிய மருந்துவகைகளை வழங்குதல். | |
| | | | ♦ | வைத்திய ஆலோசனைகளை வழங்குதல். | 11 |
| 05. | i. | | ♦ | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை | |
| | | | ♦ | சிறுவர் நன்னடத்தை பராமரிப்புத் திணைக்களம் | |
| | | | ♦ | சிறுவர் மற்றும் மகளிர் தொடர்பான செயலணி | |
| | ii. | | ♦ | சிறுவர் உரிமைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| | | | ♦ | பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் | |
| | iii. | | | பக்கம் 44 னைப் பயன்படுத்துக. | 11 |
| 06. | I. | | | மனிதநேயம், நேர்மை, தன்னம்பிக்கை | |
| | ii. | | ♦ | கல்வி C/ D/ G | |
| | | | ♦ | உரிய பாதுகாப்பு B/ F/ H | |
| | | | ♦ | சமய நம்பிக்கை A/ E | 11 |
| 07. | I. | | | <u>இடமிருந்து வலம்</u> 1. பாடசாலை 2. போக்குவரத்து 3. இலங்கைப் பொலிஸ் 4. சுற்றாடல் <br> <u>மேலிருந்து இடம்</u> 5. கவலை 6. பாதுகாப்பு 7. இயற்கை | |
| | ii. | | | கோபம் :- தாக்குதல், தூற்றுதல் <br> மகிழ்ச்சி :- ஆடுதல், கைதட்டல் <br> பயம் :- உடல் நடுங்குதல், கூக்குரலிடல் <br> துக்கம் :- அழுகை, வியர்வை <br> பக்கம் 46 ஐப் பார்க்க. | 11 |

* * * * *



kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page